# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் மன்ற சாதாரணக்கூட்டம் தனி அலுவலரால் 28.02.2019ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆணையாளர்/தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி

## பொருள் – 661

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் 250 லிட்டர் **Lysol** மற்றும் 5 **Sprayer** வாங்க 31.01.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்புகள் வரப்பெற்று உள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்புகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| I) **Eswari EnterPrises – Devakottai** | | |
| 1. | லைசால் 1 லிட்டர் – Rs.390/– | Rs.390/– |
| 2. | கைபம்புகள் Sprayer 1– எண்ணம் | Rs.19,800/– |
| II)**MD SPL 205- Usilampatti.** | | |
| 1. | லைசால் 1 லிட்டர் – Rs.390/– | Rs.425/– |
| 2. | கைபம்புகள் Sprayer 1– எண்ணம் | Rs.20,500/– |

**அலுவலகக்குறிப்பு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பு வழங்கிய **Eswari Enterprises – Devakottai** என்பவருக்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.661, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 662

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.28369/J3/2018, நாள் 22.11.2018ன்படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஓராண்டிற்கு வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் 30 பணியாளர்கள் அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்ததின் பேரில் 15.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு,

1. M/s மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளினிங் ஏஜென்சி, காரைக்குடி
2. M/s ஜெய் ஸ்ரீரடி சாய் மேன் பவர் ஏஜென்சி, திருநகர்,மதுரை.
3. M/s அவர் லேண்ட் இஞ்சினியரிங் பிரைவேட் லிமிட், சென்னை.
4. M/s ரில்யோன் பெசிலிடி சர்வீஸ் பிரவேட் லிமிட், சென்னை.
5. M/s அம்மா செக்குரிட்டி மேன் பவர் சர்வீஸ், கே.புதுூர், மதுரை.

மேற்கண்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகள் அடிப்படையில் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுகொள்ளப்பட்டு , ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| **வ.எண்.** | **ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்த சதவீகிதம்** |
|---|---|---|
| 1 | M/s மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளினிங் ஏஜென்சி, காரைக்குடி. | மதிப்பீட்டைவிட 7.94 % குறைவு |
| 2 | M/s ஜெய் ஸ்ரீரடி சாய் மேன்பவர் ஏஜென்சி, திருநகர், மதுரை. | மதிப்பீட்டைவிட 3.39 % குறைவு |
| 3 | M/s அவர் லேண்ட் இஞ்சினியரிங் பிரைவேட் லிமிட், சென்னை. | மதிப்பீட்டைவிட 3.95 % குறைவு |
| 4 | M/s ரில்யோன் பெஸிலிடி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை. | மதிப்பீட்டைவிட 0.53 % அதிகம் |
| 5 | M/s அம்மா செக்குரிட்டி மேன் பவர் சர்வீஸ், கே. புதுார், மதுரை. | மதிப்பீட்டைவிட 7.59 % குறைவு |

மேற்கண்ட M/s மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளினிங் ஏஜென்சி, காரைக்குடி நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைந்த சதவீகிதம் **7.94 %** குறைவாக உள்ளது. அதனை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.662, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள் – 663</u>

**தேவகோட்டை** நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2018–2019–ன் ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு **தேவகோட்டை** நகராட்சிக்கு LCV வாகனங்கள் - 2 எண்ணம் சப்ளை செய்தல் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.1191/P3/2019, நாள்.21.01.2019 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிகள் மேற்கொள்ள 15.02.2019ல் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது . வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு,

| வ.எண் | **ஒப்பந்தக்காரர்** பெயர் |
|---|---|
| 1 | Lakshmi Auto Diesel works<br>No:-4,Workshop Corner, Salem Main road,<br>Mettur Dam , Salem-636401 |
| 2 | KRYSTTAL MOTORS pvt ltd<br>39/2, M.M Brothers Thottam<br>Kanthampatty bye pass , Salem-636005 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் 15.02.2019 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறைகள் மட்டும் திறக்கப்பட்டு தொழில்நுட்ப (Technical Bid) தகுதிகள் தொழில்நுட்ப ஆய்வுக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த நிறுவனங்களும் தொழில் நுட்பத் தகுதிளை செய்ததை தொடர்ந்து, மேற்படி பணிக்கான இரண்டு நிறுவனங்களின் விலை விகிதம் (Price Bid) ஒப்பந்தப்புள்ளிகள் திறக்க அறிவிப்பு வழங்கப்பட்டு

21.02.2019 அன்று திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விலை விகிதம் பின்வருமாறு .

**சிப்பம்–1**

| வ. எண். | **ஒப்பந்தக்காரர்** பெயர் | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதம்** |
|---|---|---|
| 1. | Lakshmi Auto Diesel works<br>No:-4,Workshop Corner,<br>Salem Main road<br>Mettur Dam, Salem-636401 | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட **2.68** சதவீதம் குறைவு |
| 2. | KRYSTTAL MOTORS pvt ltd<br>39/2, M.M Brothers Thottam<br>Kanthampatty bye pass<br>Salem-636005 | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட **1.38** சதவீதம் குறைவு |

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட **M/s Lakshmi Auto Diesel works,Salem-636401** நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட **2.68 %** சதவீகிதம் குறைவாக உள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.663, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 664

**தேவகோட்டை நகராட்சியில்** குடிநீர் மற்றும் வடிகால் **நிதி 2018-2019-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | **அழகாபுரி நகர் ஜோசப் பள்ளி அருகில் புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணி.** | **5.00** | 1) திரு.எ.ஆரோக்கியசாமி | 0.17% குறைவு |
| | | | 2) திரு.ஆர்.ராஜசேகரன் | 2.37% அதிகம் |
| 2 | **இராம்நகர் மற்றும் நாகாடியார் நகர் பகுதிகளில் அமைந்துள்ள புதிய நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தானியங்கி குளோரினேசன் பிளான்ட் அமைத்தல் பணி.** | **5.00** | 1) Sri Raja Ganapathy Engg works – Chennai-54 | 0.35% குறைவு |
| | | | 2) Sri Sabari Engg works- Chennai-54 | 1.97% அதிகம் |
| 3 | **இராம்நகர் 3வது வீதி பகுதியிலுள்ள ஆழ்துளைக் குழாய் கிணற்றினை ஆழப்படுத்தி புதிய நீரேற்றி பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் பணி.** | **3.00** | 1) திரு.எ.ஆரோக்கியசாமி | 0.21% குறைவு |
| | | | 2) திரு.ஆர்.ராஜசேகரன் | 1.94% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | **நீரேற்றிகள் விநியோகம் செய்தல் பணி.** | **5.00** | 1) திரு. டி. பாண்டி | 0.04% குறைவு |
| | | | 2) திரு. கே.சுந்தரபாண்டியன் | 1.46% அதிகம் |
| 5 | **சிவகங்கை ராஜா ரோடு பகுதியில் புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து நீரேற்றி பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் பணி.** | **5.00** | 1) திரு.எ.ஆரோக்கியசாமி | 0.20% குறைவு |
| | | | 2) திரு.ஆர்.ராஜசேகரன் | 2.45% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.664, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் – 665**

**தேவகோட்டை நகராட்சியில்** பொதுநிதி, குடிநீர் மற்றும் வடிகால் **நிதி 2018-2019-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 26.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி</u><br>**அண்ணாநகர் பூங்கா இடத்தில் கூடுதல் பேவர்பிளாக் நடைதளம், கழிப்பறை வசதி மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல்.** | 3.00 | 1) திரு.கே.காசிலிங்கம் | 0.17% குறைவு |
| | | | 2) திரு.கே.காளிமுத்து | 1.72% அதிகம் |
| 2 | <u>குடிநீர் மற்றும் வடிகால் ிதி</u><br>**தேவகோட்டை நகராட்சி திருப்பத்தூர் ரோடு (தியாகிகள் ரோடு முதல் அண்ணா பேருந்து நிலையம் வரை ) மழைநீர் வடிகால் சிறுபாலங்களுடன் கட்டுதல் பணி.** | 5.00 | 1) திரு.ஆர்.தர்மராஜன் | 0.34% குறைவு |
| | | | 2) திரு. **பி. ரெக்ஸ் ஆண்டோ** | 1.35% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.665, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் – 666**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 30 துப்புரவு பணியாளர்களை **தனியார்** மூலம் பணியில் ஈடுபடுத்த 29.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிப்பு என செய்திதாளில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் வரப்பெற்று உள்ளது. பட்டியல்படி தொகை ரூ.8467/—யினை Malar Publication pvt Ltd என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **Bill No.** | **Bill Date** | **Amount** |
|---|---|---|
| MDU-D19010218 | 19.01.2019 | Rs.8467/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**—மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.666, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள்—667

தேவகோட்டை நகராட்சியில் 2018—2019 ஆம் நிதி ஆண்டில் கீழ்காணும் பல்வேறு திட்டப்பணிகளுக்கு ஒப்பந்தம் புள்ளிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்காணும் விளம்பர நிறுவனத்திடம் இருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நாளிதழின்பெயர் | பட்டியல் எண் மற்றும் தேதி | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | Bright Advertising | DIPR/469/2019 25.01.2019, WS/HSC | 86,626/— |
| 2. | தினத்தந்தி தொழில் மலர் | MDU18-19 0030775/25.01.2019 | 16,380/— |

மேற்காணும் விளம்பர நிறுவனங்களுக்கு தொகை ரூ.1,03,006/—வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**—மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.667, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள்— 668

தேவகோட்டை நகராட்சி 2019—2020ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை மற்றும் 2018—2019ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**—மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.668, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்–669</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.மு) துறை அரசாணை (நி) எண்.2, நாள்.13.02.2019ன்படி தேவகோட்டை நகராட்சியில் வறுமைக்கோட்டு கீழ் வாழம் நகர்புற ஏழைகளுக்கு ஒருமுறை சிறப்பு நிதி உதவி ரூ.2000/– வழங்கும் திட்டத்தின் கீழ் வார்டு வாரியாக கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள பயனாளிகளின் விபரத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து வாங்க, தேவையான படிவத்தினை நகல் எடுக்கவும் அதனை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.1,00,000/– (ஒரு லட்சம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**–மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.669, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்</u> – 670

| | |
|---|---|
| **பார்வை** | **1)**தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1009/2007/எச்1, நாள்.09.12.2015.<br>**2)**நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பியது நாள்.19.12.2018.<br>**3)**தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1009/2007/எச்1, நாள்.17.12.2018. |

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி இந்நகராட்சியில் 13 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ள பார்வை 1ல் காணும் உத்தரவின்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணி ஒப்பந்தகாலம் 09.12.2018ம் நாள் முடிவுற்றபடியால் இந்நகராட்சி துப்புரவு பணி தனியார் மயம் ஒப்பந்தப்புள்ளி கோர பார்வை 2ல் காணும் கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரப்பட்டு விண்ணப்பம் நிலுவையில் உள்ளது.

மேற்காணும் நிர்வாக அனுமதி இதுநாள் வரை கிடைக்கப்பெறாததாலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படாததாலும் பார்வை 3ல் காணும் இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி 3 மாதங்களுக்கு ஏற்கனவே துப்புரவு பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின்படியும், ஒப்பந்த தொகையின்படியும் மூன்று மாதங்களுக்கு ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் மேற்கண்ட பணி நீட்டிப்பு 09.03.2019 உடன் முடிவுபெறும் நிலையில் உள்ளதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதாலும் இந்நகராட்சி பொதுசுகாதாரப்பணிகள் பாதிப்பு அடையாத வண்ணம் மேலும் நான்கு மாத காலம் 09.03.2019 முதல் 30.06.2019 முடிய அல்லது துப்புரவு பணி ஒப்பந்தப்பணி கோரப்பட்டு ஒப்படைக்கும் நாள் வரை இதில் ஏதும் முன்னதாக உள்ளதோ அதுவரை இந்நகராட்சி துப்புரவுபணிகள் ஏற்கனவே இந்நகராட்சி மூலம் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படியும் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படியும் மதுரை மீனாட்சி

சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி நீட்டிப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**–மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.670, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்–671</u>**

பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனத்திற்கு 31.03.2019 உடன் சாலைவரி செலுத்தும் தேதி முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை உள்ள காலங்களுக்கு கீழ்காணும் விபரப்படி சாலைவரி தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | TN63 Y6296 | ரூ.3000/– |
| 2. | TN63 T3253 | ரூ.3800/– |
| 3. | TN63AX5459 | ரூ.3000/– |
| 4. | TN63 AQ1534 | ரூ.21850/– |

**<u>அலுவலகக்கதுறிப்பு</u>**–மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.671, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் – 672**

தேவகோட்டை நகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு செலுத்தவேண்டிய சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணங்களை குடிநீர் விநியோக உபவிதிகளின்படி நடப்பாண்டு 2019–2020–க்கு கீழ்காணும் அட்டவணைப்படி 5 % உயர்வு செய்திடவும் 01.04.2019 முதல் அமல்படுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| நடப்பில் உள்ள கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| நீளம் | | கருங்கல் சல்லி சாலை (ரூ) | தார்சாலை (ரூ) | சிமெண்ட் சாலை (ரூ) |
| சாலை சீரமைப்பு கட்டணம் | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2200 | 3700 | 4500 |
| | 31–90 மீட்டர் நீளத்திற்கு | 2200 | 3700 | 4500 |
| மேற்பார்வை கட்டணம் | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2000 | 2400 | 2500 |
| | 31–90 மீட்டர் நீளத்திற்கு | 4700 | 5000 | 5200 |

| 5 % உயர்வு செய்யப்படும் கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| சாலை சீரமைப்பு கட்டணம் | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2310 | 3885 | 4725 |
| | 31–90 மீட்டர் நீளத்திற்கு | 2310 | 3885 | 4725 |
| மேற்பார்வை கட்டணம் | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2100 | 2520 | 2625 |
| | 31–90 மீட்டர் நீளத்திற்கு | 4935 | 5250 | 5460 |

**அலுவலகக்குறிப்பு–** கட்டணம் உயர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.672, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்– 673**

தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு நகராட்சிகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணிகள் சம்மந்தமான பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு 2018–2019ம் ஆண்டுக்கு இந்நகராட்சியின் பங்கு தொகை ரூ.50,000/= (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

நகரியல் பயிற்சி மையத்திற்கு 2018–2019ம் ஆண்டின் பங்கு தொகை ரூ.50,000/= வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.673, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–674**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, கைலாசநாதபுரம் பகுதிகளில் முறையான வடிகால் வசதி இல்லாததால் வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் வெளியேற வழியின்றி ரோட்டிலேயே குளம்போல் தேங்கி நிற்கின்றது. இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. மேலும் வீட்டில் இருந்து வெளியேறும் தண்ணீர் அருகில் உள்ள வீடுகளில் புகுந்து சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே இப்பகுதிகளில் உடனடியாக மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்துதல் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக மழைநீர் வடிகால் சிறுபாலங்களுடன் அமைத்தல் பணிக்கு ரூ.4,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**–குடிநீர் மற்று ம் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.674, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள்–675

தேவகோட்டை நகராட்சியில் பொது நிதி 2018–2019ன் கீழ் நகர்மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 02.01.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய தெரு மீன்மார்க்கெட் குளக்கால் அருகில் ZINC COATED SHEET மற்றும் WELDMESS தடுப்பு அமைத்தல் பணி | 0.50 | 1) திரு.ஆர்.தர்மராஜன் | 0.99 % குறைவு |
| | | | 2) திரு. கே.சுந்தரபாண்டியன் | 1.47 % அதிகம் |
| | | | 3) கொப்புடையாள் கிரில் ஒர்க்ஸ் | 1.00 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> –

மேற்காணும் பணியின்அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.தர்மராஜன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.675, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

(ஒப்பம்) கே.சுதா

ஆணையாளர்/தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி